27th June 1957]

இன்னொரு விஷயம். கேள்வி கேட்கும்போதும், பேச எழுந்திருக்கும் போதும் கனம் அங்கத்தினர்கள் தங்களுடைய சொந்த இடத்தில் உட்கார்ந்திருக்க வேண்டும். ஏனென்றால் அவர்களுடைய பெயரை நான் தப்பாக அழைக்கும்படி நேரிடலாம். அவர்களுடைய பெயரை நான் தப்பாக அழைப்பதாக கனம் அங்கத்தினர்கள் பின்னர் வருந்தக்கூடாது.

SRI A. GOVINDASAMY : கனம் மந்திரி அவர்கள் ஒரு உப கேள் விக்குப் பதில் சொல்லும்போது பரிசீலனை விஷயத்தில் அதிருஷ்டம் இருந்தால் சீக்கிரத்தில் ரிசல்ட் கிடைக்கும் என்பதாகச் சொன்னார்கள். நமது சர்க்காருக்கு அதிருஷ்டம் இருக்கிறதா இல்லையா என்று கேட்கிறேன்.

THE HON. SRI R. VENKATARAMAN : அதிருஷ்டம் இருக்கிறதா இல்லையா என்று ஜோஸியரைக் கேட்கலாம்.

General Elections, 1957.

*8 *Q.*—SRI N. K. PALANISAMI : Will the Hon. the Minister for Finance be pleased to state—

(*a*) the amount spent for the General Elections held during March 1957; and

(*b*) whether Travelling Allowance has been paid to all the officers who conducted the elections ?

THE HON. SRI C. SUBRAMANIAM : (*a*) An expenditure of about Rs. 37,58,000 has been incurred by the Government up to the end of April 1957 in connexion with the General Elections 1957 to the House of the People and the Madras Legislative Assembly. Some more expenditure is likely to be incurred on certain items, such as payment of Travelling Allowance bills of polling personnel, etc.

(*b*) Not yet completely, Sir.

SRI N. K. PALANISAMI : போன தேர்தலில் வேலை செய்தவர்களுக்கு இரண்டு மூன்று வருஷங்கள் கழித்துக்கூட அவர்களுக்குச் சேரவேண்டிய பணம் போய் சேர்ந்து இருக்கிறது. அம்மாதிரி நிலைமை ஏற்படாமல் தேர்தலில் வேலை செய்த ஆபீஸர்களுக்கு ஒரு குறிப்பிட்ட மாத காலத்திற்குள் ஊதியம் கொடுப்பதற்கு சர்க்கார் ஏற்பாடு செய்யுமா ?

THE HON. SRI C. SUBRAMANIAM : இது பற்றி எல்லாக் கலெக்டருக்கும் அறிக்கை விடப்பட்டிருக்கிறது. இந்த முறையில் துரிதமாக நடவடிக்கை எடுத்து கூடிய சீக்கிரம் அந்தக் கூலியைப் பட்டுவாடா செய்ய ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது.

SRI V. K. RAMASWAMY MUDALIYAR : இதில் மத்திய சர்க்கார் நம் சர்க்காருக்கு எவ்வளவு தொகை கொடுக்கிறார்கள் என்பதை கனம் அமைச்சர் அவர்கள் சொல்வார்களா ?

THE HON. SRI C. SUBRAMANIAM : பாதித் தொகை நமக்குக் கொடுப்பார்கள்.

SRI A. V. P. ASAITHAMBI : கூடியவரையில் மூலக் கேள்விக்கும் பதில் தமிழில் சொன்னால் நல்லது என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

MR. SPEAKER : முதலில் கேட்ட கேள்விக்குப் பதில் ஆங்கிலத்திலும், பின்பு தமிழில் கேட்கப்படுகிற உப கேள்விகளுக்கு தமிழிலேயே பதில் சொல்வதும்தான் இங்குள்ள வழக்கம்.

SRI A. A. RASHEED : What is the deposit amount that has been forfeited to the Government?

THE HON. SRI C. SUBRAMANIAM : I would like to have notice.

SRI K. R. VISWANATHAN : தேர்தல் சமயத்தில் வாக்காளர்கள் தேர்தல் சாவடிக்கு முன்பு வெய்யிலிலும், மழையிலும் பாதுகாப்பு இன்றி நின்றுகொண்டிருப்பதால் தேர்தல் சாவடிக்கு முன் பாதுகாப்பு இல்லாத இடங்களில் கொட்டகை அமைத்துக் கொடுக்க சர்க்கார் முன் வருவார்களா ?

THE HON. SRI C. SUBRAMANIAM : இந்தக் கேள்வியில் "பொதுத் தேர்தல்" என்ற ஒரு வார்த்தை இருப்பதைத் தவிர இந்தக் கேள்விக்கும், உப கேள்விக்கும் வேறு எவ்வித சம்பந்தமும் இல்லை.

SRI M. S. SELVARAJAN : தேர்தலில் வேலைசெய்கிற அதிகாரிகளுக்கு அட்வான்ஸ் வசதி கூட இம்முறை செய்து வைத்திருந்தது வாஸ்தவம் இல்லையா ?

THE HON. SRI C. SUBRAMANIAM : ஆம். ஆங்காங்கு அட்வான்ஸும் கொடுத்து அவர்கள் செலவுக்கு வேண்டிய சௌகரியங்களும் கொடுக்கப்பட்டது.

Handloom cloth stocks.

* 10 Q.—SRI K. SATTANATHA KARAYALAR (on behalf of Sri M. Kalyanasundaram) : Will the Hon. the Minister for Industries be pleased to state—

(a) whether the Government are aware that huge stocks of handloom cloth are accumulated both with the Co-operative Producing Societies and the private producers in the State; and

(b) what steps were taken by the Government for finding markets and for giving relief?

THE HON. SRI R. VENKATARAMAN : (a) There is only a slight accumulation of stocks of handloom goods produced by looms in some select regions of this State. This is not peculiar to the handloom sector of the Textile industry alone; there have been reports of accumulation of stocks of cloth in the Mill sector also indicating a general slump in the textile market.

(b) A number of schemes have been implemented with success for expanding the markets for the handloom goods and for giving relief to the handloom weavers, with financial assistance, extended by the Government of India for the purpose, from the Handloom Cess Fund. These schemes are being continued.

SRI K. SATTANATHA KARAYALAR : எவ்வளவு ஸ்டாக் இருக்கிறது, அதன் விலை என்ன என்று சொல்ல முடியுமா ?

THE HON. SRI R. VENKATARAMAN : மொத்த உற்பத்தி சுமார் எழு கோடி எழுபது லட்சம். ஸ்டாக் தங்கியிருப்பது எழுபது லட்சம்.

SRI K. ANBAZHAGAN : கைத்தறித் துணி தென்னாட்டில் மட்டுமே மிகுதியாகத் தயாரிக்கப்படுகிற காரணத்தால் பிறபகுதிகளில் இருந்து ஆலைத் துணிகள் இங்கு மிகுதியாக வருவதைத் தடுக்க மாகாண சர்க்கார் மத்திய சர்க்காருக்கு வேண்டுகோள் விடுமா ?